(3) தகவல் கோரல்.

கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது, துணி தேக்கம் இல்லையென்று சொன்னார்கள்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1979–80 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதத்தில் பேசக் கூப்பிட்டேன். கேள்வி நேரம் முடிவுற்றது என்று ஏற்கனவே அறிவித்து விட்டேன். பேசுவதற்காக அழைக்கிறேன். விவாதத்திலே கலந்து கொள்ள அழைக்கிறேன்.

(திரு கூத்தகுடி ச. சண்முகம் எழுந்தார்).

கேள்வி நேரம் முடிந்தவுடனே, பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே, அமருங்கள். (குறுக்கீடு). அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

திரு. துரை முருகன்: அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். எங்கள் தலைவரும் சேர்ந்துதான் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுக்கிறார்கள். ஆனால், நீங்கள் சபையிலே அலுவல் ஆய்வுக் குழு முடிவுப்படி தான் நடந்து கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அப்படிக் கேள்வி எழுப்புவது சரியல்ல. தவறு செய்து, நான் குற்றவாளி என்றே குற்றம் சாட்டினாலும், இப்படி கேள்வி எழுப்புவது சரியல்ல. நான் அலுவல் ஆய்வுக் குழுவை மீறி நடந்தால் உங்கள் தலைவர் கேட்கட்டும், துரைமுருகனுக்கு அந்த வேலை இல்லை.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1979 மார்ச் 22

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அறையிலே, ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வதாகச் சொன்னீர்கள். அதை எடுத்துக்கொள்ளவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் அறையிலே கேட்க வேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது. மற்ற நேரங்களில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம்.

திரு. க. சுப்பு: * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவிலே, இன்று ஒத்தி வைப்புத் தீர்மானம் இடம் பெறக் கூடாது என்றுதான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்ததா, வரவில்லையா, வருமா, வராதா என்று அறையிலே வந்து கேளுங்கள். சொன்னவர்கள் எதிர்க் கட்சித் தலைவர்கள். நீங்கள் எழுந்து பேசுவதே தவறு. . .

திரு. க. சுப்பு: * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு முக்கியமான பிரச்னை என்று அல்ல. எந்தப் பிரச்னையாக இருந்தாலும், திரு. சுப்பு இப்பொழுது எழுந்து கேட்கக் கூடாது. உட்காருங்கள். திரு. சுப்பு பேசியதை எல்லாம் நீக்கிவிட வேண்டுமென்று உத்தர விடுகிறேன். (திரு. நா. சுந்தரராஜ் நின்றார்). திரு. மாரிமுத்துவை கேளுங்கள்—உங்கள் தலைவரைக் கேளுங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடன், பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும் அந்த முறையை நான் அனுமதித்த காரணத்தாலே, ஒத்தி வைப்புத் தீர்மானம் என்னவாயிற்று, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்னவாயிற்று என்று. . . . .

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 22]

திரு. க. சுப்பு : * * *

திரு. துரை முருகன் : எங்கள் தலைவர் பார்ட்டியிலே, எங்கள் கட்சியிலே, சொல்வதைக் கேட்கிறோம். ஆனால், அவைக்கு நீங்கள்தானே தலைவர். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கவே கூடாது.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்புவைப்பற்றி எனக்குத்தெரியும். எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று அவர் நினைக்கக்கூடாது. (திரு. சுப்பு குறுக்கீடு). திரு. சுப்பு எதை வேண்டுமானாலும் இங்கே பேசிவிடலாமா? இப்படி எழுந்து கேட்பதே விதிகளுக்கு முரணானது, அவர் கேட்க முடியாது. நான் அனுமதிக்க முடியாது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இன்று நிதியமைச்சர் பதில் உரை, மற்றக் கட்சித் தலைவர்களுடைய உரையும் இருக்கிற காரணத்தினால், கேள்வி நேரம் முடிந்ததும் 10 மணிக்கு அழகர்சாமி, மாரிமுத்து பிறகு நான் பேசுவதாக முறை வகுக்கப்பட்டது. அதை இன்று எடுத்துக் கொள்ளவில்லை, மறுநாள் எடுக்கப்படும் என்று தலைவர் அவர்களே அறிவித்து விட்டால் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொன்னேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, ...

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே,

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நீங்கள் சொல்லவில்லை. . . . .

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயதுசெய்து உட்காருங்கள், நான் தங்களிடம் பேசவில்லை, கட்சித் தலைவர்களிடம் பேசுகிறேன். யார் யார் என்னிடம் என் அறையில் தீர்மானங்கள்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1979 மார்ச் 22

கொண்டு வந்து கொடுத்தார்களோ அவர்களுக்கு நேரிலேயே நான் சொல்லியிருக்கிறேன். அதை தாங்கள் உங்கள் தலைவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : நாங்கள் அவர்களிடம் கேட்க வேண்டியதில்லை. இந்த அவையில். . .

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, நாங்கள் அவர்களிடம் கேட்க வேண்டியது இல்லை. இங்கே. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசுவீர்கள். நான் சொன்னாலும் கேட்க மாட்டீர்கள், உங்கள் கட்சித் தலைவர்கள் சொன்னாலும் கேட்க மாட்டீர்கள். அது உங்கள் விருப்பம். நீங்கள் இப்படி எழுந்திருந்து பேசுவது தவறு. நான் நின்று அறிவித்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. க. சுப்பு : சட்டசபைக்கு வருவதே தப்பு, வரக்கூடாது என்று சொல்வீர்கள் போல் இருக்கிறதே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் விருப்பம், தயவு செய்து எல்லோரும் அமரவேண்டும், நீங்கள் உங்கள் தலைவரை கேட்டுக் கொள்ளுங்கள். திரு. அழகர்சாமியை பேச அழைக்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நான் சண்டை போடவில்லை, பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் நீங்கள்தானே தலைவர். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உடகாருங்கள், அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொள்கிற தலைவர்கள், உங்கள் கட்சித் தலைவர்கள் சொன்ன பிறகும் நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்கள், உங்கள் கட்சித் தலைவருக்கும் கட்சி கட்டுப்பாட்டுக்கும் நீங்கள் கட்டுப்பாடாமல் இருந்தால் நான் என்ன செய்வது,

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் இல்லை, கேள்வி நேரத்திற்குப் பிறகு என்பது இன்றைக்கு மட்டும்தானா இல்லை எப்பொழுதுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு மட்டும்தான்.

திரு. மு. அம்பிகாபதி : இன்றைக்கு மட்டும்தான் என்றால் பொறுத்துக் கொள்ளலாம்.

1979 மார்ச் 22]

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்த அவைக்கு நீங்கள்தானே தலைவர், உங்களைத்தானே கேட்க வேண்டி வரும். மெம்பர் என்ற முறையில் நாங்கள் பேச வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்குப் பின்னாலும் இப்படிப் பேசினால் என்ன செய்வது? நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். உங்கள் கட்சித் தலைவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. துரை முருகன்: [* * * * *]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சிக்குள் கட்டுப் பாடு இல்லை என்றால் அதற்கு நான் என்ன பண்ணுவது?

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துரை முருகன் அவர்கள் சொன்ன வார்த்தைகளை குறிப்பேட்டில் இருந்து நீக்கி விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக நான் வருத்தமும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கைக்கு இணங்க திரு. துரை முருகன் பேசிய வார்த்தைகளை அவைக்குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட உத்தர விடுகிறேன். திரு. அழகர்சாமி பேசட்டும்.

(4) வரவு-செலவுத் திட்டம்—1979-80—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1979–80ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச்சொல்ல விரும்பு கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் சென்ற ஆண்டைவிட ஏறக்குறைய 100 கோடி ரூபாய் அதிகமாக செலவிடும் திட்டங்கள் போடப்பட்டிருந்தபோதிலும் கூட போதிய அளவு முன்னேற்றத் திற்கான ஒதுக்கீடுகள் காணப்படவில்லை.

ஏதோ புது தொழில் ஏற்படுத்துவதற்கான சிறப்பு ஏற்பாடு களோ, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய வசதி களோ, பாசன வசதிகளோ, அல்லது அதிகமான அளவிலே

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகறறப் பற்றது.